**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. 375/2014<br>STC.<br>M.C. |
| Deposition of witness | : | PW.1 |
| Name | : | ராமசந்திரன் |
| Father's /Husband Name | : | தளக்கொடி |
| Village | : | தெற்கு வாட்டாக்குடி |
| Taluk | : | பட்டுக்கோட்டை |
| Caste | : | |
| Calling | : | இந்தியன் |
| Religion | : | இந்து |
| Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 08th day November 2019

**முதல் விசாரணை.**

நான் தெற்கு வாட்டாக்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். சென்னையில் ஆசிரியர் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும் எனது அண்ணன். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் பாகப்பிரிவினை தொடர்பான பிரச்சனை நீண்ட நாட்களாக இருந்து வந்தது, போர் செட் மூலமாக விவாசயத்திற்கு தண்ணீர் கொடுப்பதில் என் அண்ணன் மாரியப்பனுக்கும் எனக்கும் பிரச்சனை இருந்து வந்தது. இது சம்பந்தமாக 24.05.2014 அன்று காலை 08.30 மணியளவில் வீட்டின் பின்புறம் இருந்த தென்னந்தோப்பில் போர் செட்டில் குளித்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியான எனது அண்ணன் அருவளுடன் வந்து என்னை பார்த்து தேவுடியா, குச்சிகாரி மகனே என்று என்னை ஆபாசமாக திட்டி ஏன்டா தண்ணீர் தொட்டியில் குளிக்கிறாய் என்று கேட்டார் நான் ஏன் என்னை பேசுகிறாய் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி மாரியப்பன் என் இடது பக்க தலையின் பின்பக்கம் வெட்டினார். மீண்டும் என்னை வெட்ட வரும் போது என் இடது கையால் தடுத்தேன் அப்போது எனது இடது முழங்கையில் வெட்டு பட்டு இரத்தகாயம் ஏற்பட்டது. (சாட்சி காயத்தழும்பினை காட்டினார்.) நான் பயந்து சத்தம் போட்டவுடன் சிவசாமி மகன் மாரிமுத்து, தங்கவேல் மகன் சங்கர் ஆகியோர் வந்து என்னை எனது சித்தப்பா மகன் வீரசேகரன் காரில் அழைத்து சென்றுபட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள் . அங்கு மேல்சிகிச்சைக்கு தஞ்சை

மருத்துவக்கல்லூரியை பரிந்துரைத்தார்கள் ஆனால் நான் தஞ்சை மீனாட்சிமருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். பின்பு மதுக்கூர் போலிசார் மருத்துவமனைக்கு வந்து என்னிடம் புகார் வாக்கமூலம் பெற்றார்கள் அந்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது தான் அந்த புகார் வாக்குமூலம் **அசாஆ1** ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

மேற்கொள்ளப்படவில்லை.

ஓம்/-எஸ்.முத்துமுருகன்,
நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.